**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 148/2014.

நாள் 10.04.2023.

பெயர். ரவீன்காந்த் த/பெ. மனோகரன்

பி.வா.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ராந்தம் கிராமம் பக்கத்தில் உள்ள பெரியகொழப்பலூர் பூர்வீகம் ஆகும். நான் சென்னையில் குடியேறிவிட்டேன். வாதியின் தகப்பனார் லிங்கப்ப நாயுடுவை எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியும். நான் சொத்து வாங்கும்போது மேற்படி லிங்கப்ப நாயுடுவை எனக்குத் தெரியும்.

2. நான் நிலத்தை பார்வையிடும்போது வீட்டு மனைகளாகத்தான் இருந்தது அதன் பிறகு கிரையம் வாங்கும்போது நிலமாக மாற்றி விட்டோம். நான் 01.06.2007ம் தேதியன்று கிரையம் வாங்கினேன். நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் கிரையம் வாங்கினோம். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு லிங்கப்ப நாயுடுவிடம் விற்பனை ஒப்பந்தம் போட்டேனா என்றால் போட்டேன். கிரைய ஒப்பந்தம் போடும்போது வீட்டுமனைகளாகத்தான் சொத்து இருந்தது.

3. கிரையம் ஒப்பந்தம்போடும்போது அதன் சர்வே எண்.282/5, 282/6, 282/7, 282/8 ஆகும். மேற்படி கிரைய ஒப்பந்தமும் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து போட்டோம் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய பிறகு நான் ஆவணத்தை உடனடியாக வாங்கிவிட்டேனா என்றால் வாங்கி விட்டேன். நான் உடனடியாக கிரையப்பத்திரம் வாங்கவில்லை என்றாலும், மாவட்ட பதிவாளரிடம் குறைவான முத்திரைதாளை செலுத்திவிட்டுதான் பத்திரம் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் கிரையப்பத்திரத்தை வாங்கிவிட்டேன். அதன் பிறகு மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து தான் முத்திரை கட்டணம் செலுத்தினேன்.

4. நான் முத்திரை கட்டணம் அதிகமாக செலுத்த வேண்டும் என்பதற்காகத் தான் மனைகளாக கிரையம் பத்திரம் பதிவு செய்யாமல் விவசாய நிலமாக கிரையப் பத்திரம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்யத்தான் அந்த நிலத்தை கிரையம் வாங்கினேன். மேற்படி வீட்டுமனைகளுக்கு பஞ்சாயத்திடம் அப்ரூவல் வாங்கிவிட்டு அதன் பிறகு எவ்வாறு நிலங்களாக

மாற்றினீர்கள் என்றால் அந்த நிலத்திற்கு பஞ்சாயத்திற்கு அப்ரூவல் வாங்கவில்லை.



அதனால் நிலங்களாக மாற்றி விட்டோம். நான் கிரைய ஒப்பந்தத்தில் சொல்லியுள்ள சர்வே எண்களை மட்டும் தான் கிரையப்பத்திரம் வாங்க முடியும் என்றால் சரியல்ல.

5. சர்வே எண்.282/5, விஸ்தீரணம் 60 சென்ட், சர்வே எண்.282/7ல் விஸ்தீரணம் 79 சென்ட் மொத்தம் சேர்த்து ஒரு ஏக்கரா 39 சென்ட் தேவிகாபுரம் மெயின் ரோட்டில் இருப்பதை அளந்து எடுத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்கூறிய 4 சர்வே எண்களில் லிங்கப்ப நாயுடு கூறி தான் அளந்து எடுத்துக் கொண்டோம். நான் கிரைய ஆவணம் பதிவு செய்து கொண்டபிறகு பட்டாவை என் பெயருக்கு மாற்றி கொண்டேனா என்றால் மாற்றிக் கொண்டேன்.

6. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு சர்வே எண்.282/5, மற்றும் 282/7க்கு மட்டும் தான் பட்டா வாங்கியுள்ளேன். மற்ற இரு சர்வே எண்களுக்கும் பட்டா வாங்கவில்லை. நான் வாங்கியதாக சொல்லும் பட்டா தவறானவை என்றால் சரியல்ல. சர்வே எண்.282/7ல் மொத்த விஸ்தீரம் 1 ஏக்கரா 94 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண்.282/7ல் லிங்கப்ப நாயுடுவின் வீடு, தளம், கிணறுமேடு, தொட்டி ஆகியவை 25 சென்ட் என்றால் சரிதான். மேற்படி லிங்கப்பநாயுடு சர்வே எண்.282/7ல் 9 சென்ட் நிலத்தை ரகு என்பவருக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் கிரைய ஒப்பந்தம் போட்டு விட்ட பிறகு தான் லிங்கப்ப நாயுடு ரகுவிற்கு நிலத்தை விற்றுள்ளார். லிங்கப்ப நாயுடு ரகுவிற்கு 2004ல் ஒரு வீட்டு மனையும், 2006ல் இரு வீட்டு மனையும் விற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

7. சர்வே எண்.282/7ல் வாதிக்கு 97 சென்ட் நிலம் இருக்கிறது என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் அவரது தந்தை 2003ம் ஆண்டு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்குத் தெரியுமா என்றால் வில்லங்கச்சான்று போட்டு பார்த்தபோது தெரிந்தது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

8. செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்த சம்பந்தமாக வாதி தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரியுமா என்றால் தற்போது தான் தெரிய வந்தது. அசல் வழக்கு எண்.332/2006 இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு எண் எனக்குத் தெரியாது. மேற்படி அசல் வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பானை விவரம் எனக்குத் தெரியுமா என்றால் 2 மாதத்திற்கு முன்பாகத்தான்

தெரயும். வாதி வழக்கு நிலுவையில் இருக்கும் விவரத்தை மறைத்து நான் வாங்கிய



கிரையப் பத்திரத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்.

9. லிங்கப்ப நாயுடுவிற்கு சர்வே எண்.282/7ல் 1 ஏக்கரா 94 செண்ட்டில் 1 ஏக்கரா 39 செண்ட் போக லிங்கப்ப நாயுடுவிற்கு 63 செண்ட் தான் உரிமை இருக்கிறது என்றால் சரியல்ல. சர்வே எண்.282/7ல் 1 ஏக்கரா 4 செண்ட் கிரையம் வாங்கியதாக தவறாக கிரையப்பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.282/8ல் விஸ்தீரணம் 95 செண்ட் என்றாலும் நான் எனது கிரையப்பத்திரத்தில் 5 செண்ட் தான் காண்பித்துள்ளேன் என்றால் நான் வாங்கியதைத்தான் காண்பித்துள்ளேன். சர்வே எண்.282/8ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 94 செண்ட் இருக்கும். சர்வே எண்.282/8ல் மொத்த விஸ்தீரணமும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய 5 செண்ட்டை மட்டும் தான் காண்பித்துள்ளேன்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)